# கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்
வழங்கும்
# தமிழ் நாவல்களுக்கான திருமதி ரங்கம்மாள் பரிசு - ரூபாய் 50,000/-

## விதிமுறைகள்

1. இத்தமிழ் நாவல் பரிசுத்திட்டம் திருமதி ரங்கம்மாள் பரிசு என்று அழைக்கப்படும்.
2. 2023-2024 ஆம் ஆண்டுகளில், இந்தியாவில் பிரசுரம் செய்யப்பட்டு, புத்தக வடிவில் வெளிவந்திருக்கும் நாவல்கள் மட்டும் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
3. பரிசுத் தொகை ரூ.50,000/-. இது முறையே நாவலாசிரியருக்கு ரூ.40,000/-, பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/- என்று பகிர்ந்து அளிக்கப்படும்.
4. நாவல்கள் அச்சிடப்பெற்று புத்தக வடிவில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. நாவல்கள் சொந்தக் கற்பனையாகவே இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்புகளாகவோ, தழுவல்களாகவோ இருத்தல் கூடாது.
6. மறைந்த எழுத்தாளர்களின் நாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
7. இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் வெளியிடப்பட்ட நாவலின் அச்சிட்ட நான்கு பிரதிகளைப் போட்டிக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பிய பிரதிகளை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது.
8. போட்டிற்குரிய நாவல்களை 28.02.2025 தேதிக்குள்ளாக அறநிலைய நிர்வாக அறங்காவலருக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
9. உரிய காலத்தில் வந்து சேரத்தவறினாலோ, தபால் மூலம் அனுப்புகையில் இழப்பு ஏற்பட்டாலோ, அவைகளுக்கு அறநிலையம் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாது.
10. போட்டிக்கு வரும் நாவல்களில் சிறந்த நாவலைத் தேர்ந்தெடுக்க மூன்று பேர்கள் கொண்ட நடுவர் குழுவை கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம் நியமனம் செய்யும்.
11. இப்போட்டியில் அறநிலையைச் சார்ந்தவர்களின் நாவல்களோ, நடுவர்களின் நாவல்களோ பங்குபெற ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
12. நடுவர் குழுவின் தீர்ப்பையொட்டி, அறநிலைய செயற்குழு பரிசுக்குரிய நாவலை முடிவு செய்யும்.

13. ஒரு நாவலை, ஓர் ஆசிரியர் மட்டுமே எழுதியிருக்க வேண்டும். ஒருவருக்கு மேற்பட்டோர் எழுதியது ஏற்கப்படமாட்டாது.

14. முதற்பதிப்பு நாவல் மட்டுமே போட்டிக்கு ஏற்கப்படும். மறுபதிப்புக்கள் ஏற்பதற்கில்லை.

15. ஏற்கெனவே இந்த அறக்கட்டளையில் பரிசு பெற்றவரின் இன்னொரு நாவலுக்குப் பரிசு தருவதற்கில்லை. அத்தகையவர்கள் நாவல்கள் அனுப்ப வேண்டாம்.

16. வேறு ஓர் அமைப்பில்/அறக்கட்டளையில் பரிசு பெற்ற நாவலும் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

17. நாவல் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இணைய தளம், ஒளி அச்சு (xerox) ஆகியவற்றில் வெளியான நாவல் ஏற்கத்தக்கதில்லை.

18. இப்பரிசுத்திட்டம் பற்றிய எந்தவிதமான கடிதத் தொடர்பும், போட்டியில் கலந்து கொண்டபின் தவிர்க்கப்படல் வேண்டும்.

19. இப்பரிசுத்திட்டம் பற்றிய அனைத்து நடைமுறைகளிலும் அறநிலையச் செயற்குழுவின் முடிவே இறுதியானதாகும். இவை எந்த ஒரு நீதி மன்றத்திலும் கேள்விக்குரியதாகவோ, சர்ச்சைக்குரியதாகவோ செய்யப்படத்தக்கது அல்ல.

20. மேற்கூறிய விதிகளைத் திருத்தவோ, மாற்றவோ புதிய விதிகளை சேர்க்கவோ, அறநிலையச் செயற்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

---

**நிர்வாக அறங்காவலர்**

கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம், கலை மையம்
அவனாசி சாலை, விமான நிலையம் அஞ்சல், கோயமுத்தூர் – 641 014.
தொலைபேசி எண்: 0422-2574110, 94421 60895
Website: www.kasthurisreenivasanartgallery.com E.Mail: kst.culturecentre@gmail.com